# WORD OF CHRIST
# [கிறிஸ்துவின் வசனம்]

கொலோ 3:16


ஆசிரியர் சகோ. அர்ச்சுனன் | II கொரி 3:6 | ஜுன் 1993


வாசகர்களுக்கு

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக அனுப்பப்படுகிறது படித்துவிட்டு மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுங்கள். உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகளை வரவேற்கிறேன். இதழின் வேத அறிவுப் போட்டியில் கலந்து கொண்டு வேத அறிவைப் பெருக்கி கொள்ளுங்கள் சத்தியத்தையும் அறிந்து கொள்ளுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக! ஆமென்

ஆமென்!

## THE LORD'S FAMILY
## கர்த்தருடைய குடும்பம்

அன்பான தேவ பிள்ளைகளே இம்மாதத்தில் கர்த்தருடைய குடும்பத்தை குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதும்போது எபே 3:14 15 இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள முழுகுடும்பத்துக்கும் நாமகாரனகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால் படியிட்டு என்று வாசிக்கின்றோம். நீங்கள் உங்கள் குடும்பத்தார்களோடு சேர்ந்து இவ்விதமாக முழங்கால்படியிட்டு பிதாவை நோக்கி தொழுது கொள்கின்றீர்களா, கர்த்தர் சொல்லுகிற எல்லா காரியத்திற்கும் குடும்பமாக கீழ்ப்படிந்து அவர் வழி நடக்கின்றீர்களா

கர்த்தருடைய குடும்பம் துன்மார்க்கனுக்கு விலக்கப்பட்ட குடும்பமாக இருக்க வேண்டும். பிசாசின் வழிகளில் ஒன்றையும் அறியாதிருந்து கர்த்தருடைய வழியில் நடக்க வேண்டும். அனுதின ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும். குடும்பமாக கிறிஸ்து இயேசுவை தரித்தவர்களாக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக நினைத்து உதரித்தள்ளி கிறிஸ்துவை பின்தொடர வேண்டும் ஏன் என்றால் கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார் நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம். எபி. 3;6 அன்பான தேவ பிள்ளையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவருடைய அதாவது தேவனுடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக 'உண்மை' உள்ளவராகயிருக்கிறார் என்று வாசிக்கிறோம். நாமும் குடும்பத்தில் எல்லா காரியத்திலேயும் உண்மையுள்ளவர்களாகயிருக்க வேண்டும்.

உலகப்பிரகாரமான குடும்பத்துக்கும் கர்த்தருடைய குடும்பத்திற்கும் அநேக வேறுபாடுகளை நாம் காண்கின்றோம். இன்றைய நாட்களில் எத்தனையோ பிரிவினை சபைகளைபார்க்கின்றோம் காரணம் ஏன்!கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியாமையே வேதம் என்ன சொல்லுகிறது ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக்காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். என்று எபே 5:24ல் வாசிக்கின்றோம் குடும்பத்தில் மனைவியானவள் எந்தக்காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் அப்பொழுது பிரிவினைகளை தவிர்க்க முடியும்! பிரச்சனைகளையும் அகற்றமுடியும் சமாதானவாழ்வை குடும்பத்தில் காணமுடியும் அன்பான தேவபிள்ளைகளே நீங்கள் உங்கள் சொந்த குடும்பத் தலைவர்களுக்கு கீழ்படிகின்றீர்களா! அப்படி கீழ்படியவில்லை என்றால் சபையானது எப்படி கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் சபையாக செயல்படுகின்றதோ அப்படியே நீங்களும் உங்கள் குடும்பத் தலைவர்களுக்கும் கீழ்படிந்து நடங்கள் அப்பொழுது கர்த்தருடைய குடும்பமாக இருப்பீர்கள்.

## ★ சபை செய்திகள்

1 சகோதரி குளோரி அர்ச்சுனன் உடல் சுகவீனத்திற்க்காக ஜெபியுங்கள்

2 சகோதரி எப்சிபாய் அவர்களுக்கு ஒரு அழகான பெண்குழந்தையை கர்த்தர் கொடுத்தார் அவர்களுக்காக ஜெபியுங்கள்

3 சகோ பொன்னருக்கு கண்பார்வை கிடைக்க ஜெபியுங்கள்.

## ★ மணமகன்தேவை

தனியார் மருத்துவமனையில் பார்மஸிஸ்டாக பணிபுரியும் சகோதரிக்கு கர்த்தருக்கு பயந்த மணமகன் தேவை

## ★ பரிசு

மே மாதம் இதழின் வேத அறிவுப்போட்டியில் பரிசு பெறுபவர்கள்

1. சகோ ஸ்டீவன்
2. ,, தானியேல் தமிழ்வாணன்
3. ,, பவுல்
4. சகோ தயாளன்
5. ,, காஸ்பல்
6. சகோதரி ஸ்டெல்லா

## ★ மே மாத இதழின் விடைகள்

1. தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக்கொள்வது பிர: 12;13
2. நாலு பங்காக யோவா 19:23
3. நியாயாதிபதி யெப்தா நியா 11:39
4. பவுல் II கொரி 11:33
5. விக்கிரகங்களை உபா 7;26
6. மோசே
7. வேண்டுவதில்லை
8. கவுதாரி
9. 40 நாள் வனாந்திரத்தில்
10 இல்லை

## ✶ இம்மாத வேத அறிவுப்போட்டி

1. எவர்களை முன் குறித்தாரோ அவர்களை என்ன செய்துமிருக்கிறார்,
2. எந்த இராஜாவுக்கு 60 பெண் பிள்ளைகள் இருந்தன.
3. பதினாறு நாளாய் ஒன்றும் சாப்பிடாமல் கப்பல் பயணம் செய்த அப்போஸ்தலன் யார்?
4. கோலைக் கசக்கி அதிலிருந்து பனிநீரை ஒருகிண்ண பிழிந்தவன் யார்?
5. யார் அந்திக் கிறிஸ்து.
6. எல்லாவற்றையும் உண்டு பண்ணினவர் யார்?
7. சுடிகாரத்தில் இறங்கியிருந்த சூரியசாயை பத்துபாகை திரும்பிற்று இது யாருக்கு அடையாளமாக சொல்லப்பட்டது?
8. குழியில் இறங்குபவர்கள் எதை தியானிப்பதில்லை?
9. இயேசு எந்த குஷ்டரோகி வீட்டில் போஜனப்பந்தியிருந்தார்?
10. ஒரு குடும்பத்தின் தலைவன்யார்.

## தேவை தேவை தேவை

ஆண்டவருக்கு ஊழியம் செய்ய அர்ப்பணிப்புள்ள வாலிப சகோதரர்கள் தேவை. இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

இவண்,

**தேசிய வேதாகம கல்லூரி**

13, சாய் நகர்,
சென்னை. - 600 082 இந்தியா.

If Undelivered Please Return To:
**THE EDITOR**
**Word of Christ Post Box No. 5**
**BATLAGUNDU-624202. Anna Dt.**

**For private Circulation only.**

Published by Batlagundu Church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu.